**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 187/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுப்புலெட்சுமி | த–பெ /க.பெ. | அழகப்பன் |
| ஊர்: | : | பள்ளத்தூர் | சமயம்: | |
| வயது: | : | 49/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.01.2026**

---------------------------------------------------------------------------------------------------

**22.01.2026**

**முதல் விசாரணை:**

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 10.03.2022 அன்று எதிரி புகார்தாரருக்கு எழுதிக்கொடுத்த கேட்பு **கடனுறுதி சீட்டு அசல் ம.சா.ஆ. 1 ஆகும்**. கடந்த 26.06.2024 அன்று புகார்தாரர் கொடுத்த மனு மீது பள்ளத்தூர் காவல்நிலையத்தில் கொடுத்த **புகார் மனு ஏற்புச்சான்றிதழ் அசல் அ.சா.ஆ. 2 ஆகும்.** கடந்த 24.07.2024 அன்று எதிரிபள்ளத்தூர் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்த **வாக்குமூலம் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 3 ஆகும்.** கடந்த 12.09.2024 எதிரி பள்ளத்தூர் காவல் நிலையத்தில் **எழுதிக்கொடுத்த வாக்குமூலம் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.4** ஆகும். கடந்த 19.02.2025 அன்று புகார்தாரருக்கு பள்ளத்தூர் காவல் நிலையத்தில் கொடுத்த **புகார் மனு ரசீது 76/2025 அசல் ம.சா.ஆ. 5 ஆகும்**. கடந்த 05.03.2025ம் தேதியிட்ட ஆக்சிஸ் வங்கி காரைக்ககுடி, கிளை

**காசோலை (காசோலை எண் 128933) அசல் ம.சா.ஆ.6 ஆகும்.** கடந்த 13.03.2025 ல் Account closed என்ற காரணம் கண்டு **திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ அ.சா.ஆ. 7 ஆகும்.** கடந்த 05.04.2025 அன்று இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **சட்ட அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.8 ஆகும்.** கடந்த 15.04.2025 தேதியன்று எதிரி மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை **அசல் ம.சாஆ.9 ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**குறுக்கு விசாரணை – ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.22 18:01:12 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)